**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - திரு. சந்திரசேகர் **PW-44** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - லோகையா | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - 38 |

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:-**

நான் கோவை மாவட்டம் மதுக்கரை தாலுக்கா அரிசிப்பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2012 ஆம் ஆண்டு கோவை தெற்கு வட்டம் கோவை ஊராக கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்த சமயத்தில் 16.10.2012 அன்று கோவை தெற்கு வட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் பேரில் கோவை அவிநாசி சாலையில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்திற்கு நானும் நகர கிராம நிர்வாக அலுவலர் செந்தில்குமார் என்பவரும் சென்றோம். அங்கு சென்று மேற்படி காவல் துணை கண்காணிப்பாளரை சந்தித்தோம் அவர் 2012 ஆம் வருடம் டிஎன்பிஎஸ்சி தேர்வு வினாத்தாள்முறைகேடு சம்பந்தமாக நான்கு நபர்களை விசாரிக்க வேண்டும் என்று கூறினார் மேற்படி விசாரிக்க உள்ளதாக கூறிய நான்கு நபர்களையும் அறிமுகம் செய்து வைத்தார் அதில் செந்தில்குமார், தியாகராஜன், ஸ்ரீதர் ராஜ், ஆனந்தராவ் என்கிற பட்டய பள்ளி ஆனந்தராவ் ஆகியோர்கள் ஆவார்கள். அன்று பகல் 12 மணி அளவில் செந்தில்குமார் என்பவர் தானாக முன்வந்து யாருடைய அச்சுறுத்தலும் இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதில் டி என் பி எஸ் சி தேர்வுக்கு முன்பாகவே வினாத்தாள் வாங்கி படித்ததாகவும் அதற்காக ரூபாய் 6 லட்சம் பணம் கொடுத்ததாகவும் கூறினார். மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் பெயர்களையும் சொன்னார். பணத்திற்கு பதிலாக அசல் சான்றிதழ்கள் வைத்திருப்பதாகவும் அவ்வாறு இருக்கும் இடத்தை காண்பித்து எடுத்துக் கொடுப்பதாக சொன்னார் அதில் நானும் செந்தில்குமார் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவதாக உள்ள

கையெழுத்து என்னுடையது தான். **அ.சா.ஆ**.44. அதன் தொடர்ச்சியாக தியாகராஜன் என்பவர் யாருடைய வற்புறுத்தலும் துன்புறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதில் செந்தில்குமார் என்பவர் தனது சகோதரர் என்றும் மேற்படி செந்தில்குமார் கூறியதை ஒத்துக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி முறைகேடு சம்பந்தமாக பணம் வாங்கியதையும் அசல் சான்றிதழ் வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் வைத்திருக்கும் இடத்தை காண்பிப்பதாகவும் கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடன் இருந்த சாட்சி செந்தில்குமார் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.45**. பின்னிட்டு பாலன் என்கிற ஸ்ரீதர் ராஜ் என்பவர் தானாக முன்வந்து வழக்கில் தனது தொடர்பான முறைகேடுகளையும் அது தொடர்பாக பணம் பெற்றதை குறித்தும் அசல் சான்றாவணம் பெற்றது குறித்தும் அவரது நண்பர்கள் குறித்தும் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் அசல் சான்றிதழ் இருக்கும் இடத்தை காண்பித்து எடுத்து ஒப்படைப்பதாக கூறினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சாட்சி செந்தில்குமாரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.46**.
பின்னிட்டு 17.10.2012 அன்று மாலை 4.15 மணி அளவில் மேற்படி செந்தில்குமார் என்பவர் அது வீட்டிற்கு சென்றோம் அவரது வீடு திருவள்ளூர் மாவட்டம் புள்ளரப்பாக்கம் என்ற இடத்தில் உள்ளது. அங்கிருந்து பொன்னரசு என்பவரிடமிருந்து பெற்ற அசல் சான்றிதழ்களை வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதில் பத்தாம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி சான்றிதழ்கள் இருந்தது. போலீசார் மேற்படி ஆவணங்களை மகஜரில் கைப்பற்றினார்கள் அவ்வாறு தயாரித்த மகஜரில் நானும் சாட்சி செந்தில்குமாரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.47** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் தான் போலீசார் அப்பொழுது கைப்பற்றிய ஆவணங்கள் மேற்படி ஆவணங்கள் ஆறு எண்ணிக்கைகள் **அ.சா.ஆ.48**. சுமார் 4:30 மணி அளவில் தியாகராஜன் என்பவரது வீட்டிற்கு சென்று அவர் அருணா என்ற நபரிடம் இருந்து பெற்ற அசல் ஆவணங்களை போலீசாரிடம் ஒப்படைத்தார். மேற்படி ஆவணங்களை போலீசார் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து அதில் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் மகஜரில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான் மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.49**. பின்னிட்டு பாலன் என்கிற ஸ்ரீதர் ராஜ் என்பவரது வீட்டிற்கு அதாவது சென்னை கிண்டியில் உள்ள அவரது வீட்டிற்கு அன்று மாலை சுமார் 7.30 மணி அளவில் சென்றோம். அவர் குணசேகரன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட அசல் சான்றிதழ்களை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார்.

போலீசார் மேற்படி ஆவணங்களை கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து அதில் கைப்பற்றினார்கள் மேற்படி மகஜரில் நானும் செந்தில்குமார் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.51.** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் தான் போலீசார் அப்பொழுது கைப்பற்றிய ஆவணங்கள் மேற்படி ஆவணங்கள் மூன்று எண்ணிக்கைகள் **அ.சா.ஆ.52**. பின்னிட்டு நான் கோவைக்கு வந்து விட்டேன் அதன் பிறகு 20.10.2012 அன்று மறுபடியும் சிபிசிஐடி காவல்துறையினர் என்னையும் செந்தில்குமார் என்பவரையும் அழைத்தார்கள். நாங்கள் மேற்படி சிபிசிஐடி கோவை அலுவலகத்திற்கு சென்றோம். அங்கு ஆனந்தராவ் என்பவர் இருந்தார் மேற்படி நபர் யாருடைய அச்சுறுத்தலும் இல்லாமல் அவரே தானாக முன்வந்து மேற்படி டிஎன்பிஎஸ்சி தேர்வு முறைகேடு சம்பந்தமாக பணம் வாங்கியது குறித்தும் அதில் அவர்களது நண்பர்களுக்குண்டான தொடர்பையும் அசல் சான்றிதழ் தொடர்பாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மேற்படி அசல் சான்றுகளை பெங்களூரில் உள்ள அவரது மகன் கிருஷ்ணராவ் என்பவர் வீட்டில் அவருக்கு தெரியாமல் மறைத்து வைத்திருப்பதாகவும் சொன்னார். தன்னை அங்கு அழைத்துச் சென்றால் மேற்படி சான்றுகளை எடுத்துக் கொடுப்பதாக சொன்னார். மேற்படி வாக்குமூலத்தில் நானும் செந்தில்குமாரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.53.** இது தொடர்பாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க இயலும். எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை ஆஜர் இண்மைக்காக மனு தாக்கல் செய்யப்பட்டது.

**1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**<u>எதிரிகள் 4, 6,7,8,9,11,12,18,19,22,23,24,26,27,28,29 மற்றும் 30 தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:-

நான் 16, 17 மற்றும் 20 தேதிகளில் சிபிசிஐடி அலுவலகத்தில் புலன்விசாரணை நிமித்தமாக நான் ஆஜரில் இருந்தேன் என்று காண்பிக்க எனது அலுவலக பதிவேடுகளில் எந்தவிதமான குறிப்புகளும் இல்லையென்றால் சரிதான். நான் 16 மற்றும் 17 ஆம் தேதிகளில் மேற்படி சிபிசிஐடி அலுவலகத்திற்கு சென்ற சமயத்தில் ஆனந்தராவ் என்ற எதிரி அப்பொழுது ஆஜரில் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி நபரை போலீசார் காவல்படுத்தியிருந்தார்கள் என்றால் சரிதான். 20-ம் தேதி நான் மேற்படி கோவை சிபிசிஐடி அலுவலகத்திற்கு சென்ற சமயத்தில் மேற்படி எதிரி ஆனந்தராவ் என்பவர் போலீசாரின் கட்டுப்பாட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி நான்கு எதிரிகளையும் சிபிசிஐடி போலீசார் ஒரே அறையில் ஒரே இடத்தில் வைத்து தான்

விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். 16-ம் தேதி போலீசார் ஆனந்தராவ் என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் முதலில் மூன்று எதிரிகளிடம் தான் விசாரணை செய்தார்கள் ஆனந்தராவ் என்பவரிடம் 20-ம் தேதி தான் விசாரணை செய்தார்கள். என்னை துணை காவல் கண்காணிப்பாளர் விசாரித்ததாக கூறும் நாள் 16.10.2012 என்றால் சரிதான். மேற்படி தேதியில் என்னை போலீசார் விசாரித்த சமயம் 20.10.2012 அன்று மேற்படி எதிரி ஆனந்தராவ் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றது குறித்து நான் போலீஸாரிடம் சொன்னதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான் அவ்வாறு தான் உள்ளது. 20.10.2012 அன்று ஆனந்தராவ் என்பவரை போலீசார் விசாரித்த சமயம் மேற்படி நபர் 16.10.2012 முதல் போலீசாரின் காவலில் உள்ளார் என்ற சந்தேகம் எனக்கு வரவில்லையா என்றால் வரவில்லை. 16.10.2012 அன்று மூன்று எதிரிகளை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த சமயத்தில் ஒவ்வொருவரும் என்னென்ன வாக்குமூலம் கொடுத்தார்கள் என்பது பற்றி மற்றவர்களும் கேட்டு இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் 16.10.2012 அன்று போலீசார் எந்த எதிரியையும் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. 16.10.2012 க்கு முன்பாகவே போலீசார் மேற்படி நான்காம் எதிரி ஆனந்தராவ் என்பவரையும் கைது செய்து விசாரித்து வந்துள்ளார்கள் என்றால் 16-ம் தேதி அவரை பார்த்தேன், 20-ம் தேதியும் பார்த்தேன். 17.10.2012 அன்று திருவள்ளூர் சென்ற சமயமும் போலீசார் மேற்படி எதிரி ஆனந்தராவ் என்பவரையும் உடன் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். திருவள்ளூரில் எதிரி செந்தில் குமார் மற்றும் தியாகராஜன் ஆகியோர்களை விசாரித்த சமயம் அருகே இருந்த பொதுமக்கள் யாரையும் போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கோவையில் இருந்து திருவள்ளூர் மற்றும் திருவள்ளூரில் இருந்து சென்னை பயணம் செய்ததற்காக அரசிடம் இருந்து பயணப்படி எதுவும் கேட்டு பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். திருவள்ளூரில் மேற்படி எதிரிகளின் வீடு எங்கு உள்ளது என்று போகும் வழியிலேயே போலீசார் விசாரித்து தெரிந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் போலீசார் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும் எனது முன்பாக எந்த ஆவணங்களையும் போலீசார் கைப்பற்றவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து உருவாக்கிய ஆவணங்களில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது போலீசார் கேட்டுக் கொண்டதன் பெயரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செல்வது போல் திருவள்ளூருக்கும் சென்னைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. என் முன்பாக தயாரிக்கப்பட்டதாக கூறும் கைப்பற்றுதல் மகஜர்களில் எதிரிகளின் கையெழுத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>